**கவனிக்க .-** *2015.01.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1899 - 2015 ජනවාරි මස 23 වැනි සිකුරාදා - 2015.01.23

*1899 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 86 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 87 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** *கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் 2014, திசெம்பர் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, சனவரி மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : குருத்தலாவை ஒக்ஸ்போர்ட் இன்டர்நஷனல் (பீவீரி) எல்ரீடி
கம்பனி இலக்கம் : பீவீ 101940
கம்பனி அங்கீகாரம்பெற்ற திகதி : 2014.11.14
கம்பனி பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 186, கல்கொட, குருத்தலாவை

1-526

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் பெயர் மாற்றம் பற்றி இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : ஹேமாஸ் பவர் பீஎல்சீ
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 415 பீபி பீகியூ
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி : 'ஹேமாஸ் இல்லம்', இலக்கம் 75, பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : ரிசஸ் எனெஜி பீஎல்சீ

ரிசஸ் எனெஜி பீஎல்சீ,
ஹேமாஸ் கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

1-610

---

## அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நுகேகொடை, பாகொட வீதியில், தியவன்னா பூங்காவில், இல. 23/25 இல் வசித்தவரும் தற்போது அவுஸ்திரேலியா, மெல்பன் ஜீ.பீ.ஓ. பெட்டி 3031 இல் வதியும் வெலன்டைன் ஷெடன் பெர்னாந்து (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 670463133V) ஆகிய என்னால் வழங்கப்பட்டதும் சட்டத்தரணி மற்றும் சொலிசிட்டர் பீட்டர் திருவினால் அவுஸ்திரேலியாவில் 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தின் மூலம் இல. 517/6, போதிராஜ மாவத்தை, தலவத்துகொடையில் வதியும் சரிதா சதுரங்கனி சொட்டச்சி என்பவருக்கு ஒப்படைக்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு அந்த அற்றோணித் தத்துவம் இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி தொடக்கம் அவர்களினால் எனது சார்பாக செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் வகை கூற மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

வெலன்டைன் ஷெடன் பெர்னாந்து.

1-543

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி கீழ்க்குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : ஒறிஜின் கியூப்ட் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 102645
பதிவு அலுவலகம் : 4 ஆம் மாடி, இல. 2, காசல் ஒழுங்கை, கொழும்பு 4

எஸ்ஜே கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

4 ஆம் மாடி,
இல. 2, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

1-548

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி கீழ்க்குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : நெக்ஸ்ட்ஜென் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 102817
பதிவு அலுவலகம் : இல. 752/1, டாக்டர் டெனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு 9

எஸ்ஜே கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

4 ஆம் மாடி,
இல. 2, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

1-550

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நுகேகொட, பாகொட வீதியில தியவன்னா பூங்காவில் இல. 23/25 இல் வசித்தவரும் தற்போது அவுஸ்திரேலியா, மெல்பன் ஜீ. பீ. ஓ. பெட்டி 3031 இல் வதியும் வெலன்டைன் ஷெடன் பெர்னாந்து (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 670463133V) ஆகிய என்னால் வழங்கப்பட்டதும் சட்டத்தரணி மற்றும் சொலிசிட்டர் பீட்டர் திருவினால் அவுஸ்திரேலியாவில் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தின் மூலம் இல. 517/6, போதிராஜ மாவத்தை, தலவத்துகொடையில் வதியும் சரிதா சதுரங்கனி சொட்டச்சி என்பவருக்கு ஒப்படைக்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு அந்த அற்றோணித் தத்துவம் இல்லாதொழிக்கப் படுகின்றதெனவும் இதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி தொடக்கம் அவர்களினால் எனது சார்பாக செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் வகை கூற மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

வெலன்டைன் ஷெடன் பெர்னாந்து.

1-542

---

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

பமுனுகம, புல்லுஹேன, விஜய மாவத்தை, இல. 533 இல் குடியிருக்கும் போபே ஆராச்சிகே தோனா தம்மிகா ஸ்வர்னபாலி (தே. அ. அ. இல. 776881783V) ஆகிய நான் கொச்சிக்கடை, பல்லன்சேன, இல. 62/3 இல் குடியிருக்கும் ரொஷான் ப்ரசன்ன பெரேரா (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 722783174V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு திரு. ஜீ. ஏ. எல். பி. தம்மிகா சில்வா அவர்களால் 2009.09.23 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட 1180 ஆம் இலக்க விசேட அற்றோணி தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச்செய்கிறேன். மேற்படி ரொஷான் ப்ரசன்ன பெரேரா என்பவரால் இன்று தொடக்கம் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இதன் மூலம் அறிவித்தல் தருகிறேன்.

போபே ஆராச்சிகே தோனா தம்மிகா ஸ்வர்னபாலி.

1-663

---

**ஜோசப் லூாயிஸ் கெலரி (பிறைவேட்) லிமிட்டெட்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

ஜோசப் லூாயிஸ் கெலரி (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனி ஒன்றை 2010, மாச்சு மாதம் 22 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டதுடன் அதன் கம்பனி பதிவு இல. பீவீ 71616 என்றும் அதன் பதிவு அலுவலகம் இல. 53, டாக்டர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 5 எனும் முகவரியில் அமைந்துள்ளது என்று இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஜோசப் லூாயிஸ் கெலரி (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 53, டாக்டர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை,
கொழும்பு 5.

1-540

---

# ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

(முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்துகள் பகிரங்க ஏல விற்பனை**

***433 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**ஏல விற்பனை 1**

***கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரிய உப்போடை கிராமசேவையாளர் பிரிவில், மண்முனைப்பற்று, மட்டக்களப்பு மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட 8 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள இல. 50, பாக்கியம் மாவத்தை, சீலாமுனை கிராமம் என்ற முகவரியில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஈ. கே. திஸ்ஸவெரசிங்க அவர்களால் வரையப் பட்ட 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதியிடப்பட்ட 15/2013 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப் பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு அதிலுள்ள கட்டிடங்கள், கிணறு மற்றும் அதற்கு உரித்தான அனைத்தும் அடங்கலாக***

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 16.33பே. ; 0.0413 ஹெக்டெயர்)**

**ஏல விற்பனை 2**

***கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரிய உப்போடை கிராம அலுவலர் பிரிவில், மண்முனைப்பற்றில் அமைந்துள்ள இல. 39/18, சஸாரியாஸ் வீதி, கோட்டைமுனை என்ற முகவரியில் உள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஈ. கே. திஸ்ஸவெர சிங்க அவர்களால் வரையப்பட்ட 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட 1628/2012 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப் பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு அதிலுள்ள கட்டிடங்கள், கிணறு மற்றும் அதற்கு உரித்தான அனைத்தும் அடங்கலாக***

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 29பே. ; 0.0734 ஹெக்டெயர்)**

**வருகையாளர்கள், பொறியியலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், கட்டடக் கலைஞர்கள், தொழிலாளர்கள், சிற்றூழியர்கள், குடியிருப்போர், அனுமதிபெற்றவர்கள், அழைக்கப்பட்டவர்கள் ஆகியோர் தங்களது தீர்மானம் மற்றும் விருப்பத்தின் பேரில், இதன் பின்னர் சகல வேளைகளிலும் சகல காரணங்களின் அடிப்படையிலும், பொருட்களை ஏற்றிய அல்லது ஏற்றாத மோட்டார் கார்கள், மோட்டார் லொறிகள் அல்லது சகலவிதமான வேறு வாகனங்கள், குதிரைகள், கால்நடைகள், ஏனைய விலங்குகளுடனோ அல்லது அவை இல்லாமலோ, நடந்தோ அல்லது வேறு வகையிலோ, பயணம் மேற்கொள்ளவும், மீள் பயணத்திற்கும் முக்கியமாக இதன் பின்னர் விபரிக்கப்படும் வீதி வழியாகவோ, அதற்கு மேலாகவோ, பகலிலோ அல்லது இரவிலோ போகவும், திரும்பி வரவும், மின் கம்பிகளை நிலத்தின் கீழேயும், தலைக்கு மேலாகவும் அமைப்பதற்கும், வடிகாண்கள், எரிவாயு மற்றும் குடிநீர் விநியோகக் குழாய் அமைப்பிற்கும், வழமையாக இணைக்கப்பட்டு, உபயோகிக்கப்பட்டு, மகிழ்ச்சியுடன் பாவிக்கப்படும் உபகரணங்கள் அல்லது வேறு எந்தவிதமான, எத்தகையக பொருட்களை நிர்மாணிப்பதற்கும், முழு அளவிலான, சுதந்திரமான, உரிமைகளையும் சுதந்திரத்தையும் வழங்கி, தனியான அல்லது சகலவிதமான பாதை உரிமைகள், அனுகூலங்கள், வழிமுறைகள் என்பவற்றுடன் காணியில் உள்ள நிரந்தரமான பாதை மற்றும் வழி என்பனவற்றில் உட்செல்லல், வெளிச்செல்லல், பின் செல்லல் ஆகியவற்றுக்கான பூரணமான, தடையற்ற, சுதந்திரம்**

**கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திலுள்ள 178ஏ, பெரிய உப்போடை கிராமசேவகர் பிரிவில், சீலமுனை அமிர்தகழியில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 40 ஐக் கொண்ட ஒரு காணித்தொகுதி அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 02.67பே.)**

*(மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். காயத்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 433 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் மட்டக்களப்பில் வசிக்கும் பொன்னுத்துரை சுதாஹரன் எனவும் பொன்னுத்துரை சுதாகரன் மற்றும் நடராசா வாசுகி எனவும் வாசுகி சுதாகரன் எனவும் (இதன் பின்னர் 'இணைந்த கடன்படுநர்' என அழைக்கப்படும்) நடராசா அவர்களால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.*

*டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை (முறையே) மு. ப. 11.00 மணிக்கும், மு. ப. 11.30 மணிக்கும் எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.-** *ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;*
*(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;*
*(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;*
*(4) மொத்த விளம்பரச் செலவு 1,35,000 ரூபா ;*
*(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;*
*(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.*

*கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.*

**மேலதிக விபரங்களுக்கு.-** *011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.*

*''முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.''*

*சொக்மன் அன்ட் சமரவிக்ரம,*
*ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,*
*122 வருட கால மகோன்னத சேவையுடன்.*

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
|---|---|
| *24, டொரிங்டன் வீதி, கண்டி.* | *290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5.* |
| *தொலைபேசி : 081-2227593* | *தொலைபேசி : 011-2502680, 011-2585408* |
| *தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371* | *தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176* |
| *மின்-அஞ்சல் :* schokmankandy@sltnet.lk | *மின்-அஞ்சல் :* schokman@samera1892.com |

*இணையத்தளம் :* www.sandslanka.com

*1-637*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.